Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞு வைகாசி மீ ருஉ வெள்ளிக்கிழமை (18 May. 1962) [இல-சூ]

உலகியல் அலை

வழக்கறிஞர் சங்கத்தில்

# வரவிருக்கும் 'அரசமொழி' அங்கீகாரம்

## தமிழ்பேசும் பகுதிகளிலே சிங்களத்தைத் திணிப்பதை நியாயவாதிகளும்

### நிறைவேற்றி வைக்க நினைக்கின்றார்களா?

நீதி மன்றங்களிலே சிங்களம் ஆங்கிலத்தின் இடத்தை எடுக்கவேண்டுமென்ற நினைவு இப்பொழுது பல வேடங்களிலிருந்து பரவுகின்றது; நீதியரசர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் சிங்களத்தில் ஏன் இன்னமும் வழக்கு விசாரணை நடைபெறவில்லை என்று ஆச்சரியம் அடைந்திருக்கின்றார். இலங்கை வழக்கறிஞர் சங்கம் இந்த எண்ணத்துக்கு வழிவகுக்க ஒரு புதுவழியைக் கண்டுபிடித்திருக்கிறது. தமிழ்பேசும் வழக்கறிஞர்கள் இந்தப்போக்கைக் கண்டும் பேசாமல் மௌனமாயிருப்பதேனோ?

இலங்கையிலுள்ள எல்லாப்பாகங்களிலிருந்தும் வழக்கறிஞர்கள் இச் சங்கத்தில் அங்கத்தவர்களாய் இருக்கின்றார்கள். அப்படி இருந்தும் இச் சங்கம் தனிச் சிங்களத்தை நீதி மன்ற மொழியாகச் செய்வதற்கு முயற்சிப்பது முறையாகுமா? தமிழ்பேசும் மக்கள் நீதி மன்றங்களிலே தங்கள் மொழியைத் தங்கள் நாட்டிற் பயன்படுத்த முடியாது தடுக்கப்படுவது நீதியாகுமா? ஆங்கிலத்தை வேண்டாம் என்று அகற்றுவது ஒன்று, அந்த இடத்திற் சிங்களமே தனியாக அமைதல் வேண்டுமென்று அவாவுவது இன்னொன்று.

தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டின் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பாகங்களிலே தங்கள் தாய்மொழியிற் கருமமாற்ற முடியாதிருப்பதற்கு வழக்கறிஞர்கள் வழிகாட்டுவது பெரும் பிழையாகும். ஆனிமாதம் இரண்டாம் நாள் இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தனிச்சிங்களமே நீதி மன்றமொழியாக இருத்தல் வேண்டும் என்று கொண்டுவரப்பட இருக்கும் யோசனை மேலதிகமான அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றுத் தீர்மானம் ஆகாமற்றடுப்பதற்குத் தமிழ்பேசும் வழக்கறிஞர்கள் ஒருங்கு சேர்ந்து ஊக்கமாய் உழைக்க வேண்டியது அவர்களின் கடமையாகும். இது அவர்கள் செய்யவேண்டிய தொண்டு ஆகும், தமிழ்பேசும் வழக்கறிஞர்களைத் தட்டியெழுப்பித் தருணத்தைத் தப்பவிடாது தக்கவாறு முயன்று தாய் மொழித் தொண்டும் தேசப்பணியும் செய்யும் வண்ணம் தமிழ்பேசும் மக்கள் காலந்தாழ்த்தாது ஊக்கப்படுதல் வேண்டும்.

## இளம் எழுத்தாளர் சங்க ஆண்டுவிழா

சென்ற ஓராண்டு காலமாக இலக்கியப் பணிக்காக இயங்கிவரும் யாழ். இளம் எழுத்தாளர்சங்கத்தின் ஆண்டுவிழா எதிர்வரும் ஜூன் மூன்றுந் திகதி நடைபெற இருக்கிறது இவ்விழாவிற்கு இந்தியத் தமிழ்க் கவிஞராகிய சாலை இளந்திரையன் அவர்களும் துணைவியார் கனகசவுந்தரி அம்மையாரும் பிரதம பேச்சாளர்களாக அழைக்கப்படுகின்றனர். அத்தோடு ஈழத்துப் பிரபல எழுத்தாளர் பலரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இளம் எழுத்தாளர்கள் பலர் கலந்துகொள்ளும் "நான் ஏன் எழுதுகிறேன்" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கமும் இளங் கவிஞர்கள் பங்குபற்றும் "பாடிப் பயனென்ன?" என்ற தலையங்கத்தினையுடைய கவியரங்கமும் நடைபெறும்

கருத்தரங்கத்திற்கு திரு கா. சிவத்தம்பியும் கவியரங்கிற்கு கவிஞர் சில்லையூர் செல்வராசனும் தலைமைதாங்குவார்கள் எனத் தெரியவருகிறது. இவ்விழாவில் சங்கம் இவ்வாண்டில் நடாத்தியுள்ள சிறுகதை, கவிதை, கட்டுரை நாடகப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப்பரிசில்கள் வழங்குதலும் ஆண்டுமலர் வெளியீடும் நடைபெறும்.

## நல்லூரிலிருந்து நடை பவனி

இன்று இரவு 8-30 மணியளவில் நல்லூரிலிருந்து - செல்வச்சந்நிதிக்கு முருகன் திருவுருவப்படத்துடன் அடியார்களின் நாமபஜனைக் கூட்டம் கால்நடையாகச் செல்ல இருப்பதால் இதிற் பங்குபற்றும்படி முருகனடியார்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றார்கள்.

## நற் சிந்தனை

ஊரார் சிறக்க உவப்பவரை எஞ்ஞான்றும்
பாரார் புகழ்வர் பணிந்து.

## திருவள்ளுவர் நினைவு விழாவும் ஏட்டுச்சுவடி ஊர்வலமும்

வடகொழும்பு இந்து பரிபாலன சங்க ஆதரவில் 20-5-62 ஞாயிறு மாலை மேற்படி விழா வைபவத்தின் தொடக்கமாக கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் பூசையுடன், சேர், அருணாசலம் மகாதேவா M A, அவர்கள் தலைமையில் ஆரம்பமாகும் ஏட்டுச்சுவடி ஊர்வலம் அமைகிறது, திரு, வை, முத்துக்குமாரசுவாமி அவர்கள் அறிஞர்களுக்கும் ஏனையோர்க்கும் வரவேற்புரை வழங்குவார். திரு பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் விழாவைத் தொடக்கிவைத்து தலைமைப்பேருரை நிகழ்த்தவார் இவற்றைத் தொடர்ந்து வேறு பல பேச்சாளர்கள் உரை நிகழ்த்தவார்கள் எனத் தெரியவருகிறது.

## ... அறியாச் சிங்களப்!



பெரியவர்: என்ன, மெல்ல மெல்லச் சிங்களம் எங்கள் கோடுகளிலும் புகுந்து விடும்போலிருக்கிறதே!

விகடன்: வரவர மாமியார் என்ன ஆனர் தெரியாதா? கோட்டிலே உண்மை அறிவது நோக்கமானல் வழக்கில் ஈடுபடுபவர்கள் தாய் மொழியிற் பேசவேண்டும். அப்படித் தேவை இல்லை என்றால் அந்நியமொழியிற் பேசினால் என்ன? தானறியாச்சிங்களந் தன்... என்ற பழமொழியை மறந்து விட்டீரோ?

ஓ

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம் குளிருமே.

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## பாரதத் தலைவர் பதவி ஏற்ற பண்புசால் விழா

### ஆட்சியாளருக்கும் அமைச்சர்களுக்கும் அரசியலார்வமுள்ளோருக்கும் அறிவுரைகள்

சென்ற ஞாயிறு திங்கள் நாட்களிற் பாரதத்தலைநகர் புது தெல்லியில் நடைபெற்ற மகத்தான வைபவங்கள் அரசியற் கலையின் பெருமையை இந்திய மக்கள் எவ்வாறு அடைந்து அமைந்திருக்கின்றனர் என்பதைக்காட்டின, பாரதத் தலைவராகப் பத்தாண்டுகளாகப் பண்புடன் பதவி நடத்திய பாரத இரத்தினம் கலாநிதி இராசேந்திரபிரசாத்தவர்கள் ஓய்வெடுத்துப் பாராளுமன்றத்தினரிடமிருந்தும் விடைபெற்றுச் சென்ற பிரியாவிடை விழாவில் உணர்ச்சி எழுச்சியும், அப்பெருந் தலைமையை மக்கள் மனமாரத் தெரிவு செய்த அங்கத்தவர்கள் தேர்ந்தெடுத்த தத்துவப்பொருள் விரிவுரையாளரும் பேராசிரியருமாய் இத்தரணியில் உத்தமப் புகழ் பெற்ற கலாநிதி இராதாகிருட்டிணன் அவர்கள்மீது அமைக்க அன்னார் அதை அன்பு அடிமைப் பண்புடன் ஏற்ற விழாவில் எழுந்த களிபேருவகைக் காட்சியும் உலகம் முழுவதற்கும் எடுத்துக்காட்டாக அமைந்தன என்று கூறினால் மிகையாகாது.

விழாவில் மகிமையும் எழிலும் கவினும் காட்சியும் ஒருபுறம் அழகமைக்க ஆங்கு இருபெருந் தலைவர்களின் இதயங்களினின்றும் ஊற்றெடுத்த அருவிகள்போலத் தோற்றிய உள்ளக்கிடக்கைகள் அரசியல் ஞான நடைமுற விளக்கத்தின் வரைவிலக்கணமாய்ச் சுவைத்தன.

அப்போன் மொழிகளிற் சில இவை:

மக்கள் ஆட்சிமுறை நற்பயனடைவது வாக்காளர்களின் ஒழுக்க முறைப் பண்பிலே தங்கியிருக்கின்றது.

மக்கள் இதயங்கள் ஒன்றேடொன்று ஒற்றுமைப்பட்டு மன அமைதியை உண்டுபண்ணுவதாலே தான் சுதந்தரத்தின் பெரும் பயனை அடையலாம்.

தாயானவள் மக்களை அணைத்து அவரவருக்கு வேண்டியவற்றை அமைப்பதைத் தனது கடமையாக எண்ணுவதுபோலப் பலவேறு வகைப்பட்ட மக்கள் வாழுகின்ற நாட்டைப் பரிபாலிக்கின்றவர்கள் அம்மக்களுக்கு வேண்டியவற்றை அமைப்பது கடமையாகும்.

## இலங்கைக்கு அமெரிக்க உதவி

இலங்கையின் விவசாய ஆராய்ச்சிக்கு அமெரிக்கா உதவி அளித்துள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பண்ணைப் பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த நிதி பிரஸ்தாப ஆராய்ச்சிகளை நடாத்த இலங்கைக்கு ரூபாயில்வழங்கப்படும்.

தலவாக் கொல்லையிலுள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையம் ரசாயன உதவி மூலம் தாவரச் செடி வியாதிகளைக் கட்டுப்படுத்தும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள 20,003 டாலர் ரூபாயில் வழங்கப்படும்.

இதேபோல்கல்கத்தாபல்கலைக் கழகத்திற்கும் தாவர வளர்ச்சிபற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக 56,754 டாலர் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ஹூ வைகாசி மீ
ருஉ வெள்ளிக்கிழமை

## அனைத்தும் அரச ஆதிக்கத்திலா?

இந்நாட்டுச் செய்தி வெளியீடுகளை மக்கள் பொறுப்பிலிருந்து கைப்பற்றி அரச ஆணைப்படி அரசாங்க பத்திரிகைகளாக அமைப்பதற்கு நீதி அமைச்சர் ஒரு திட்டத்தை வகுத்தார். அது போதாதென்று நிதி அமைச்சர் இன்னொரு திட்டத்தைச் சிருட்டித்து அரசாங்க பாராளுமன்றக் குழுவினரின் ஆலோசனைக்கு விட்டிருக்கின்றனர். இரண்டு ஆண்டுகளாக இந்த அரசாங்கம் செய்தி வெளியீட்டுச் சுதந்தர உரிமை மக்களுக்கு இருக்க வொட்டாது தடுக்கப் பலவேறு வகையாக எச்சரிக்கைகள் செய்துவருகின்றது. அடிப்படை உரிமைகள் என்று அவனி முழுவதும் நாடுகள் அனைவற்றிலும் போற்றிக் காப்பாற்றப்பெறும் சிலவற்றுள் செய்தி வெளியீட்டுச் சுதந்திரமும் ஒன்று என்பதை ஈழத்தரசினர் நன்கறிந்திருந்தும் கொண்டது விடாத பேதை மதி விபரீதத்தினலோ ஆட்சி முறையை ஒருவரும் குற்றஞ் சொல்லாதவாறு தடுப்பதற்காகவோ, அரச ஆதிக்கத்தின் கீழ் செய்தி வெளியீட்டுப் பொறுப்பை அமைக்க எண்ணியிருப்பது மக்களையும் அவர்களின் நலனையும் மறந்து தனி ஆட்சிமுறை நடத்தும மனப்பான்மையைக் குறிப்பதாகும். இக்கருத்தைச் சென்னை 'இந்து' முதலிய சிறந்த செய்தி வெளியீடுகள் நன்கு விளக்கி ஆட்சேபித்திருக்கின்றன,

செய்திகள் உண்மையானவையாய் வகுப்புக் கலகங்களை உண்டுபண்ணும் இயல்பில்லாதனவாய் மக்கள் நல்ல வண்ணம் வாழ்ந்து நாட்டை முன்னேற்றமடையச் செய்வனவாய் இருக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்க மாட்டார். இந்த ஒழுக்கப் பண்புக்கு இழுக்காகச் செய்திகளை வெளியிடுவோரை முறைப்படி விசாரணை செய்து தண்டிக்கும் உரிமைமட்டுமல்லக் கடமையும் ஆட்சியாளருக்குண்டு. அவ்வாறு உலகம் அறிந்த ஒரு கட்டுப்பாடு இருக்கவும அது போதாதென்று செய்தி வெளியீடுகளை அரசினரின் நேரடியான ஆதிக்கத்துக்குள் அமைக்க எண்ணுவது முறையாகாது அறமாகாது. மக்கள் தங்கள் வாக்கு உரிமையினல் ஆட்சியாளரை ஆக்கி வைத்த பின்பு அதிகார ஆதிக்கத்தின் ஆணவ மேலீட்டினல் அந்த ஆட்சியாளர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை இல்லா தொழிப்பதென்றுல் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பின் தன்மையினதாய் அல்லவா அரசமுறை தோற்றும்.

மாநில மக்கள் யாவராலும் ஆட்சேபிக்கப்படும் இந்தச் செய்தி வெளியீட்டுச் சுதந்திர நிராகரிப்புத் திட்டத்தை ஆட்சியாளர் கைவிடுதல் நன்று என்று நாம் புத்திபுகட்டுகிறேம். மூலமாய் அமைந்திருக்கும் மக்களின் உரிமைகளை முற்றுய் அழிக்க மக்களால் அமைக்கப் பெற்ற ஆட்சியாளர்கள் ஒருபொழுதும் எண்ணியிருக்கக்கூடாது. நல்ல முறையிலே ஒழுக்கப் பண்பிலே செய்தி வெளியீடுகள் வெளிவருவதற்கு வேண்டிய நடைமுறைச் சட்டங்களை இயற்றி வதந்திகளைப் பரப்புகின்றவர்களையும், பொய்யான செய்திகளை வெளியிடுகின்றவர்களையும், இனம், மொழி, மதம் என்ற வகையில் ஒருவருக்கொருவர் ஒற்றுமை குலைந்து வேற்றுமைப்பட்டுக் கலகம் உண்டு பண்ணக் கூடியவற்றை வெளியிடுபவர்களையும், குற்றஞ்சாட்டி விசாரணை செய்து தண்டிக்கும் உரிமை எந்த அரசாங்கத்திற்கும் உண்டு என்பதை ஆட்சியாளருக்கு மீண்டும் நினைவூட்டுகின்றேம்.

## சமயபாடத் தேர்தல்

வழமைபோல சைவபரிபாலன சபையாரால் நடத்தப்படும்தேவாரம், உபந்நியாசம், புராணபடனத் தேர்தல்கள் 26-5-62 சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் சைவநாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நடைபெறும். மனுப்பண்ணிய பிள்ளைகள் குறித்த நேரத்துக்கு அங்கு வந்து சேர்வார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம் 16-5-62.

## மாதர் முன்னேற்றச் சங்கம்

சரவணை மாதர் முன்னேற்றச் சங்கத்தின் 'பொதுக் கூட்டம்' ஒன்று நேற்று இரவு சரவணை நாகேசுவரி வித்தியாசாலையில் திருமதி ஞா. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியையும், ஷ சங்கக்காரியதரிசியுமான திருமதி திலகவதி திருநாவுக்கரசு வரவேற்புரை நிகழ்த்தினுர்.

'மாதரும் கலையும்' 'பெண்கள் கடமைகள்' 'பெண்களும் கைத்தொழிலும்' என்னும் விடயங்கள் பற்றி முறையே ஆசிரியை செல்வி புஷ்பா இராசரத்தினம் ஆசிரியை செல்வீ. கமலாதேவி பொன்னுத்துரை, வேலணை மாதர்சங்கக் காரியதரிசி செல்வி சு. பத்மாவதி ஆகியோர் சொற்பெருக்காற்றினர். சங்க வளர்ச்சியும் மாதர் கடமைகளும் என்பதுபற்றி தீவுப்பகுதி "ஆர். டி. ஓ" திரு. வி. சுப்பிரமணியம் எடுத்துரைத்தார். தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையாவும் இக்கூட்டத்தில் கலந்து உரையாற்றினுர். ஈற்றில் காலஞ்சென்ற சமூக சேவகி டாக்டர் மேரி இரத்தினம் மறைவு குறித்து இக்கூட்டத்தில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. திருமதி மகேஸ்வரி திருநாவுக்கரசு ஆசிரியை நன்றிகூறக் கூட்டம் முடிவடைந்தது.

# தமிழரசர் காலமும் தலைநகரும்

(முற்றொடர் 3)

**தலைநகரம் யாது?**

இவ் வரசனையும் அரசினையும்பற்றி இபுன்பத்தூத்தா கூறும் செய்திகள் கவர்ச்சிகரமானவை. "இவ்வரசனின் பெயர் ஆரியச்சக்கரவர்த்தி; கடற்படை வலிகொண்டவன், மலையாளத்திலே யான் (இபுன்பத்தூத்தா) தங்கியிருந்தபோது, இவன் நாவாய்கள் சிறியவும் பெரியவுமாக நூறு கப்பல்கள் நங்கூரமிட்டுக் கெம்பீரமாய் அங்கு நின்றன; அதிதிகளை உபசரிக்கும் அன்புசார்ந்த நெஞ்சினன். பாரசீகமொழியில் வல்லுனன், அம்மொழியில் என்னுடன் உரையாடினுன்; எனக்கு நல்ல பரிசில்களை வாரிவாரியிறைத்தான். அவைமட்டுமோ தன் இராச்சியத்திற் கிடைக்கும் திரமான முத்துக்களையும் பரிசாக ஈந்தான். அன்றியும் யான் விரும்பியவண்ணம் ஆதாம்மலைக்கு யாத்திரை செய்ய உதவியும் செய்தான்." என அவ்வரசனின் குணுகுணங்களையும் குறிப்புக்களையும் அறியத்தந்துவிட்டு அவ்வரசனின் தலைநகரைக் குறிப்பிடுபவராய் "இபுன்பத்தூத்தாவின் கூற்றின்படி ஆரியச்சக்கரவர்த்தியின் தலைநகரம், 'புத்தல' என்பதாகும். சரித்திர ஆசிரியர் பலர் இதனைப் புத்தளம் எனக் குறிப்பர். ஆனல் இவன் ஆதாம்மலைக்குப்போகும் பிரயாணத்தை விரித்துக்கூறுமிடத்து "புத்தல" என்னுமிடத்திலிருந்து பாதைமூலம் ஆற்றைக் கடந்து மன்னுருக்குச் சென்றதாகவும் அதன்பின் சிலாபத்தையடைந்ததாகவும் கூறுவான். ஆகவே 'புத்தல' என்

பண்டிதர் பொ, ஜகந்நாதன்

பது புத்தளமாக இருக்க முடியாது; சிங்கைநகர் எனக் கூறப்படும் வல்லிபுரக் குறிச்சிக்கு அணித்தாயுள்ள "புட்டனை" என இப்போது வழங்கும் கிராமமே இப்"புத்தல" வாகவிருக்கலாம். மேலும இவ்வரச பரம்பரையினரைச் சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் என்றுங் குறிப்பான். புட்டனை சிங்கையின் ஒரு பகுதி. சிங்கை என்னும் பகுதி கி. பி, மூன்ரும் நூற்ருண்டளவில் கீர்த்திவாய்ந்த இடமாய் இருந்தது. இதற்குச் சான்று வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச்சாசனம் அன்றியும் அங்கு பல கட்டிடங்களும் கோட்டை கொத்தளங்களும் அழிந்தொழிந்து மண்ணுல் மூடப்பட்டிருப்பதை இன்றும் அங்குச் செல்வோர் காணலாம். அத்துடன் இதனருகே ஒரு பெருந்துறையுமுளது. அங்கிருந்து கப்பல்கள் அக்காலத்திற் போக்குவரவு செய்தன. இப்பொழுதும் அத்துறையைக் கப்பற்றுறையெனவழைப்பர்.

(ஷ நூல். பக். xxvi—xxix)

நிற்க, வைபவமாலையில் "உக்கிரசிங்கன், சாலிவாகன சகாப்தம் 717 ல் (கி பி 795) கதிரைமலையில் இருந்தரசாண்டு வந்தான்" என்றும் (வை. மா. பக். 13) "கதிரைமலையில் இருந்த உக்கிரசிங்கராசன் சில காலத்தின்பின் செங்கடற்கல ('செங்கடக' என்றும், சில இடங்களில், 'செங்கடகல' என்றும் எழுதப்பட்டுள்ளது.) நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வந்தான்.' (யா, வை, மா. பக். 22, முதலியார் குல. சபாநாதன் அவர்கள் பதிப்பு) என்றும் உக்கிரசிங்கன் வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் பின்வந்த ஆராய்ச்சிக்காரர் இக்கூற்றுக்களையே தத்தம் ஆராய்ச்சி நூல்களில் அனுவதித்துமுள்ளனர். திரு. க, கணபதிப்பிள்ளை அவர்கள் மேலே காட்டிய கூற்றுக்களில் உக்கிரசிங்கன் சிங்கை நகரிலிருந்து வெளியேறிக் கந்தரோடையை இராசதானியாக்கினன் என்பது எவ்வாற்றுலோ? அன்றியும், கி. பி. மூன்ரும் நூற்ருண்டளவில் சிங்கைநகர் கீர்த்தியடைந்திருந்தது என்பதும் எவ்வாற்றுலோ?

—தொடரும்.

## நல்லைநகர் வயிரவர் பதிகம்

[நவாலியூர் ஸ்ரீ க, சோமசுந்தரப்புலவர் அவர்கள் பாடியது]

(முற்றொடர் - 6)

ஆய்மறைத் தலையாலு மாகமத் துறையாலு
மல்லாத கலைகளாலும்
அறியவொண் ணுதெங்கு மாயுயிர்க் குயிராகி
யானந்த மாகிநிற்கும்
தூயனே யானென்று தோன்றியக் காலெந்த
வாருெவெ னைத்தொடர்ந்து
தோன்றுதெ னறிவீச்சை தொழிலையு மறைத்துடற்
றெல்சிறை விடுத்தலைத்தும்
வாய்மதம் பேசியே நான்பிரம மென்றுலகை
வஞ்சிக்கு மாணவமெனும்
வலியபேய் தன்னையுன் ணுணிற்பி ணித்தடி
மலர்க்கீழ்மி திதத்தருள்வையேல்
மாய்வதுந் தோன்றுவது மில்லாது சுகமாக
வாழுவே னல்லைநகர்வாழ்
மாதவர்க கனுகூல வோதுகேத் திரபால
வடுகவயி ரவமூர்த்தியே. 8

வேலைமா விடமுணர னெஞ்சத்தில் வந்தநீ
மேவியென் னெஞ்சில் வந்து
வேதனைத் தலையரிந் திட்டநீ யென்பிறவி
வேதனைத் தலையரிந்து
நீலமால் நெடியமால் கொன்றநீ யென்னகம்
நின்றமால் கொன்றருளியே
நிலாமதிக் குறைமுடித் திட்டநீ
நன்னெறிநி லாமதிக் குறைமுடித்து
மேலவா னவர்குருதி பலிகொண்ட நீயெனது
வினைகள்வலி கொண்டவர்க்கு
மெய்யுணர் வளித்தநீ யேழையடி யேனுக்கு
மெய்யுணர்வ ளித்தருள்வையேல்
வாலிதா கியவின்ப மெய்திவீ டேறுவேன் வளமேவு
நல்லை நகர்வாழ்
மாதவர்க் கனுகூல வோதுகேத்
திரபால வடுகவயிரவ மூர்த்தியே. 9

—தொடரும்.

## சேதுப்பிள்ளை நினைவுக் கட்டுரைப் போட்டி

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவராகப் பணியாற்றியவரும் இலக்கிய ஆற்றல் கருதி கலாநிதிப் பட்டம் அளிக்கப்பெற்றவருமான பேராசிரியர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் நினைவாகக் கட்டுரைப்போட்டி ஒன்று நடைபெறஇருக்கிறது. போட்டியில் முதலாம், இரண்டாம், இடங்கள் பெறுவோர்க்கு உரோக்கப் பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைக்குரிய பொருள் :

1. சேதுப்பிள்ளையின் தமிழ்த்தொண்டு. (பேச்சு, எழுத்து, ஆராய்ச்சி)

அல்லது,

2. சேதுப்பிள்ளையின் பின்வரும் நூல்களுள் ஒன்றைப்பற்றிய விமர்சனம்.

(அ) வேலும் வில்லும், (ஆ) அலையும் கலையும், (இ) தமிழ் விருந்து (ஈ) தமிழின்பம்.

18-6-62 இற்கிடையில் "போட்டி ஆசிரியர்", பேராசிரியர் சேதுப்பிள்ளை நினைவுக்கட்டுரைப் போட்டி,
"இந்துசாதனம்' வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்திற்கு கட்டுரைகளை அனுப்பி வைக்கவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வாலாறு

# அரசன் வீர புருடன்

## அரிஆசனம் அணை அனைத்தும் தனி அமைப்பு

## அவையில் அமைச்சர் அறிஞர் ஆதியோர்

52. அரசன்

எல்லா நாடுகளிலும்போலவே அரசன் வீரம்பொருந்தியவனும் பெரிய ஆடம்பரங்களுடையவனுயுமிருந்தான். அவனுடைய அதிகாரம் வரம்புபடாததாக விருந்தது. அவன் தலையில் மணிகளிழைத்த முடியையும், கையில் மணிகளழுத்திய பொன் கடகத்தையும காதிற் குழையையும் மார்பில் முத்து அல்லது பவள மாலையையும், காலில் வீர தண்டையையும் விரலில் பெயர் பொறித்த மோதிரத்தையும் அணிந்திருந்தான். அவனும் பெருமக்களும் முகத்தை மழித்திருந்தார்கள். அவனைச் சூழ்ந்து அமைச்சர் சேனுபதியர், புலவர், புரோகிதர் இருந்தனர். பரிசனர் இருந்தேத்துவோர், நின்றேத்துவோர், சூழ்ந்து நின்றனர். பெண்கள் இரு பக்கங்களிலும் நின்று கவரி வீசினர். நறும்புகை இடப்பட்டது.

அரசன் இருக்கும் ஆசனம் கட்டில் எனப்பட்டது. அது சிங்கம் சுமப்பது போன்ற கால்களை யுடையதாகவிருந்தது. ஆகவே அது அரிஆசனம் எனப்பட்டது. அரசன் சாய்வதற்கு அணை இருந்தது அது அரி அணை எனப்பட்டது. அரசுகட்டில் பொன்னுலும் தந்தத்தாலும் மணிகளழுத்திச் செய்யப்பட்டிருந்தது. அவன் அரசிருக்கும் மண்டபம் அரசிருக்கை, ஓலக்கம், நாளவை, நாளிருக்கை, கொலுவிருக்கை என அறியப்பட்டது.

சிறப்புக் காலங்களில் அரசன் வீதியிற் பவனி சென்ருன். அப்போது சிற்ருலவட்டம், பேராலவட்டம், விதானம், வெண்கொற்றக்குடை முதலியன பிடிக்கப்பட்டன. விருது முன்னே சென்றது. பெருமக்கள் சிற்றரசர் என்போர் அணை சூழ்ந்து சென்ருர்கள். சங்கு, கொம்பு, எக்காளம் முதலிய வாத்தியங்களும் மேளங்களும் ஆர்த்தன. விழாக் காலங்களில் அரசி அவனுடன் கூட இருந்தாள். அவள் முடி சூடிக்கொள்ளவில்லை. அரசன் பிறந்தநாள்விழா வெள்ளணிநாள் எனப்பட்டது. அக்காலத்தில் அவன் சிறையிலிருப்பவர்களை விடுதலை செய்தான். அவன் அரண்மனையில் மாத்திரமிருக்கவில்லை. போர்க்காலங்களில் அவனே படையை நடத்திச்

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

சென்று பாசறையில் தங்கினுன, அவன், வேட்டைஆடவுஞ் சென்ருன், அக்காலத்தில் மெய்க்காவலர் அவனைக் காத்தார்கள். அரசனுக்கு எதிரில் செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்யாமல் விடுவது சிறு குற்றமாகக்கருதப்பட்டது. அரண்மனையில் அரசியும பெண்களும் தனி இடத்தில் வாழ்ந்தார்கள். கோயில்களில் அரசனுடைய வெற்றிக்காகவும் நீண்டவாழ்நாளுக்காகவும்துதிகள் செலுத்தப்பட்டன. அரசன் தங்கும் மாளிகைகள் நாட்டின் பல இடங்களிலிருந்தன. சமாதான காலங்களில் அரசன் பெருமக்களோடு நாடு முழுமையும் சுற்றி வந்தான். ஆட்சி தன்னதிகாரமாகவிருந்தபோதும் நாட்டில் ஒழுங்கும் நீதியும் இருந்தன. நீதி ஆட்சி செங்கோலெனவும் கொடிய ஆட்சி கொடுங்கோலெனவும் சொல்லப்பட்டன

பதின்மூன்ரும் நூற்ருண்டில் இலங்கைக்கு வந்த சௌ-யு-குவா என்னும் சீனப் பிரயாணி இலங்கை அரசனைப்பற்றிக் கூறியிருப்பது வருமாறு:—

இலங்கை அரசனின் நிறம் கறுப்பு. அவன் தலை மயிர் வாரி முடியப்படாதது. அவன் பல வகை நிறங்களுடைய ஆடையைஉடுக்கிறன்; சிவப்புத் தோலினுற்செய்து பொன் வார்ட்ட செருப்பை அணிந்திருக்கிறன். அவன் யானை மீது அல்லது பல்லக்கில் வெளியே செல்கிறன். நாள் முழுதும் அவன் வெற்றிலையையும் பாக்கையும் முத்துச் சுட்ட சுண்ணம்பையும் மெல்கிறன். அவனுடைய அரண்மனை வைடூரியம் நீலம் சிவப்பு முதலிய இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் அரண்மனைகள்இருக்கின்றன. இரண்டு அரண்மனைகளிலும் பொன்னுற் செய்யப்பட்ட மரங்கள் உண்டு. மரத்தின் அடியும்கொம்புகளும் பொன்மயமானவை. அதன் பூக்களும் இலைகளும் காய்களும், நீலம், சிவப்பு, வைடூரியம் முதலியவைகளால் அமைக்கப்பட்டிருக்கின்றன. அரசன் நடக்கும் தரையும் நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. மரங்களின் அடியில் பொன்னுற் செய்யப்பட்ட சிங்காசனங்களிருக்கின்றன. அவற்றுக்கு ஒளி புகக்கூடிய கண்ணுடி மறைப்பு உண்டு. அரசன் காலையில் கிழக்கு அரண்மனையிலும் மாலையில் மேற்கு அரண்மனையிலும் கொலுவிருப்பான். கொலுவிருக்கும் போது அலங்காரங்கள் வெளியே மின்னும். பொன் மரங்களும் கண்ணுடி மறைப்புக்களும் ஒன்றில் ஒன்று பட்டு விளங்கிச் சூரிய உதயம் போல் தோன்றும்.

இரண்டு வேலையாட்கள் எப்பொழுதும் அரசன் வெற்றிலையைமென்று உமிழும் எச்சிலை ஏந்துவதற்குப்பொன் காளாஞ்சிகளை ஏந்திக் கொண்டு இரண்டு பக்கங்களிலும் நிற்பார்கள். அரசன் கையில் ஐந்து அங்குலக் குறுக்களவுள்ள ஒரு ஆபரணத்தை வைத்திருக்கிருன். அதை நெருப்பினுல்எரிக்கமுடியாது அது இரவில் சூள்போலப் பிரகாசிக்கிறது அரசன் தனது முகத்தை அதனுல் தினமும் தடவுகிருன். அப்படிச் செய்வதனுல் தொண்ணூறு வயதானுலும் அவன் வாலிபத்தோடிருப்பான்.


யாழ்ப்பாணம்

**—ஐக்கிய இலாபநிதி—**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமா[ன] விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## பாடினல் மட்டும் போதாது

—:0:—

"வாழ்க்கையின் விடுதலை மோட்சம், பந்தபாசங்களில் இருந்து நாம் வீடுதலைபெற ஆண்டவனிடத்து அன்பு பெருக்கெடுக்க வேண்டும் நம்மிடத்துள்ள கெட்ட எண்ணங்களை ஒழிக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை செம்மைப்படும்."

புங்குடுதீவு - மடத்துவெளி ஸ்ரீ. பாலசுப்பிரமணியர் ஆலயத்தில் நடைபெற்ற மேற்படி ஆலய மண்டலாபிஷேக தின விரிவுரைக்கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துகையில் "ஈழநாடு" பிரதம ஆசிரியர் திரு. கே. பி. கரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியதாவது:-

ஐந்து எழுத்து மந்திரத்தை நாம் போற்ற வேண்டும், வாழ்க்கைக்கு நற்றுணையாக விருப்பது இம்மந்திரமாகும் 8 வயதின் சிவதீட்சைபெற்று, சைவ அனுட்டானங்களை மேற்கொள்ள வேண்டும். சைவர்களாகப் பிறந்தால் மட்டும் போதாது, அதன் பண்பட்ட வாழ்க்கையை நாம் மேற்கொள்ளவேண்டும், மண்ணினல்லவண்ணம் வாழ வேண்டும். 'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்று எழுதி வைப்பதிலும், பாடுவதிலும் நாம் நின்றுவிடக்கூடாது. சைவ நீதியை விளக்க-அதை நிலைபெறச் செய்ய ஆக்க முயற்சிகளில் பெரிதும் ஈடுபட வேண்டும்.

திரு. கரன் சொற்பொழிவைத் தொடர்ந்து அளவெட்டி நாடகமன்றத்தலைவர் திரு, சி. விஞசித்தம்பி ஆசிரியர் 'சிறுத்தொண்டர்' என்னும் சரிதைபற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார், திரு. விஞசித்தம்பி தமது முன்னுரையின்போது ஆலயங்களில் 'உயிர்ப்பலி' இடுவதைக் கண்டித்துப்பேசினுர். ஈற்றில் மேற்படி ஆலயத்தில் சுவாமி வீதிவலம்வரும் காட்சி நடைபெற்றது.

## நல்லூரில் முத்தமிழ்மன்றம் அங்குரார்ப்பணம்

—0—

மேற்படி மன்றத்தை அ. இ. பொ. ச. சே. சங்கக்காரியதரிசி திரு. த இராசரத்தினம் 13-5-62 ல் அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரை நிகழ்த்தினுர்.

நிர்வாகசபையினர் தேர்வில் தலைவராக திரு. சி. வயித்திலிங்கமும் உப தலைவராக திரு. த. இராசரத்தினமும் காரியதரிசியாக திரு. பொ. புண்ணியசிங்கமும், உபகாரியதரிசியாக திரு. சு. புனிதலிங்கமும் தனுதிகாரியாக திரு. ஆ. சண்முகலிங்கமும் உபதனுதிகாரியாக திரு. ம. சு துரைராசாவும் தெரிவு செய்யப் பெற்றனர்.

இவ்வாரம் (20-5-62 — 25-5-62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உடல்நிலை இன்னும்பிரச்சினைக்குரியதாகவே இருக்கும். பொறுமையை இழப்பதில் மிகவும் முந்தி நிற்பீர். முதல் இருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்கவும். வாரமிகுதிப்பகுதி தொழில் ஈடுபாடுகளுக்கு ஏற்றதாயிருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

முதலிருநாட்களும் புதிய ஈடுபாடுகளுக்குச் சாதகமானவை. திங்கள் மாலை செவ்வாய் புதன் எச்சரிக்கையோடுகழிக்கப்படவேண்டும். வார மிகுதிப் பகுதி திரும்பவும் சாதகமாய் மாறும். ஆனல் மன நிம்மதி இருக்காது,

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 4,3, திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

வாரமுற்பாதிப்பகுதி தொழில் ஈடுபாடுகளுக்கு ஏற்றது. எதிரிகளுக்கு இன்னலும் நிலபுலங்களால்இலாபமும் நிச்சயம். ஆனல் மனநிம்மதி இருக்காது. வியாழன் வெள்ளியை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

குடும்ப விவகாரங்கள் தொடர்ந்து திருப்தியற்றவையாகவே இருக்கும். இனத்தவருடன் கலகங்களும் உண்டாம். மன அமைதியிருக்காது. தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம். வார இறுதி நாளை எச்சரிக்கையாகக் கழிக்கவும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

திரும்பவும் ஒரு நல்ல வாரம். எல்லாஎதிர்ப்புக்களையும் தாண்டிவிட உம்மால் முடியும். தொழிலளவிலும் ஒரு நல்ல வாரம். உமது சாதனைகளில்பெரும் வளர்ச்சியை உம்மால் உண்டுபண்ண முடியும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பநிலை குழம்பலாக இருக்கும். உடல்நிலையும் அவ்வளவு திருப்திகரமாயிருக்காது. தந்தை வழி உறவினர் உதவியாயிருப்பர், எதிரிகளுக்கு இடையூறுண்டாம்.

**துலாம்,** சித்திரை 3, 4ம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தாய்வழி இனத்தவர் சிலதொல்லை தரலாம். தாயாரின் உடல்நிலையும் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருக்கும், தொழிலைப் பொறுத்தவரை எல்லாம் நன்மையாகவே இருக்கும். வார ஈற்றில் குடும்பத் தகராறுகள் உண்டாகலாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

உம்மால் எதிரிகளை வெற்றிகொள்ள முடியும். நிலபுலங்களால் இலாபமும்நிச்சயம். ஆனல் குடும்பஅமைதி இருக்காது.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை தொடர்ந்து திருப்தியற்றதாகவே இருக்கும். கண் நோய்க்கும் இடமுண்டு. தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம். குடும்பத்தகராறுகளும் ஏற்படும். வயிற்றுக் கோளாறிற்கும் பித்த நோய்க்கும் இடமுண்டு.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

மன அமைதி இருக்காது. வேலை வழக்கத்திலும் அதிகமாக இருக்கும், ஆனல் நீர் வேண்டியளவு ஈடுசெய்யப்படுவீர். குடும்பத்தகராறுகளும் உண்டாம்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம். நிலபுலங்களால் இலாபமும் ஏற்படும், எதிரிகளுக்கு இன்னல் உண்டாம். ஆனல் குடும்பத் தகராறுகளுக்கு இடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உமது உடல்நிலை மெல்ல மெல்லச் சீர்திருந்தும். உடன் பிறந்தோர் உதவியாயிருப்பர். பழைய முதலீடுகள் நல்ல விளைவுகளைக் கொண்டுவரும்.


### வெந்தீஸ் விற்பனை அடைவு நகைகள்

—:—

நா. சி. குமாரசாமி,
576/6 அம்மன் கோவில் ரோட்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1959-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1960 மார்கழி மாதம் 31-ந் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1962-ம் ஆண்டு வைகாசி மாதம் 27-ந் திகதி (27-5-62) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்
வண் - வட - மேற்கு
ஆனைக்கோட்டை.

M 16 11, 18-5-62


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக் கலசம்

அன்பு, கருணை, சத்தியம் ஆகியவைகளின் ஆணைகளுக்கு நாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இந்தப் பண்புகளின் மூலம்தான் மக்களை ஐக்கியத் தளையில் பிணைக்க முடியும்.

—இராதாகிருஷ்ணன்.

x x x

அரசியல்வாதிகள் சமய அடிப்படையில் வாழ்வதன் [illegible]லந்தான் நாட்டு மக்களை [illegible] பாதையில் வழிநடத்திச் [illegible] முடியும்.

N. R. இராசவரோதயம்,

x x

[illegible]லகில் தமிழுக்குமட்டுமே [illegible] பெருமையை உணர்த்த[illegible] தக்க, முத்தமிழ், கன்னித் [illegible]மிழ். தீந்தமிழ் போன்ற அடைமொழிகள் உள்ளன.

சங்கீத பூஷணம்,
சி. கணபதிப்பிள்ளை,

x x x

படித்த இளைஞர்கள் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் ஆகிய துறைகளில் ஈடுபட்டு இந்நாட்டின் தொழிற் புரட்சிக்கு வழி வகுக்க வேண்டும்.

—இராசதுரை.

## ஸ்ரீ. இராச இராசேஸ்வரி அம்பாள் கோவில் மகாசபைக்கூட்டம்

யாழ். நாயர்மார்கட்டு பேச்சியம்பாள் கோவில் என வழங்கும் ஸ்ரீ. இராச இராசேஸ்வரி அம்பாள் கோவில் மகாசபைக் கூட்டம் ஒன்று 20-5-62 ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணியளவில் ஸ்ரீ இராசஇராசேஸ்வரி அம்பாள் ஆலயத்தில், யாழ். சைவபரிபாலன சபைத் தலைவரும், முடிக்குரிய நியாயவாதியும், பதில் மாவட்ட நீதிபதியுமாகிய திரு. க. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ இருக்கிறது

அன்பர்கள் எல்லோரையும் சமூகம் கொடுக்கும்படி திரு. வெ, கந்தையா, திரு. ச. பொன்னையா ஆகியோர் அழைத்திருக்கின்றனர்.

ந. நி.

## நன்றி நவிலல்

எனது எண்பதாம் ஆண்டின் தொடக்கத்தைக் கொண்டாடச் செய்த எல்லோருக்கும் மனமார்ந்த நன்றி கூறுகின்றேன்.

வ. மு. இரத்தினேசுவரஐயர்
16-5-62.
M 20 18-5-62.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க செ, த. செ. செல்லையா பிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1-4-59 முதல் 31-3-60 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 7-6-62 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து, மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக ஷெ கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

C. இரகுநாதன்,
வெந்தீஸ் மேஸ்தர்.
195 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 13 11—5—62,



உழைப்பின் உருவகமாக நிற்கும் ஒரிசா மாகாணத்து உழவன் ஒருவனுடன் உரையாடுவதற்காக இந்தியாவிலிருக்கும் அமெரிக்க தூதுவர் யோன் கென்னத் கோல்பிறெயித் சேற்றிடையே வெறுங்காலுடன் செல்லும் காட்சி.

# பெண்கள் கடமை

சமுதாயத்திற் பிறந்ததும் மக்களெல்லோருக்கும் தனித்தனியே கடமைகளும் பிறந்து விடுகின்றன, ஆயினும் நாம கடமைகளை உணர்வதுதான் மிகவும் கஷ்டமாகத்தோன்றுகிறது. நாம் இப்பூவுலகின் கண்ணே எப்படி வாழப் பிறந்துள்ளோம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும், மனிதனுக்கு எல்லா உயிர்களிலும் மேலாக, ஆரம்ப அறிவாகிய பகுத்தறிவுள்ள தனுலேயே சான்றோர்; அரிது அரிது மானிடராதலரிது என்று கூறியுள்ளனர், இதையிட்டு மகிழ்ச்சியடையும் நாம் இச்சிறப்பின் காரணத்தை உணர்வதில்லை.

இப்படியே மானிடப்பிறவியெடுத்த பெண்களாகிய நாமும் சமுதாயத்தில் ஏன் பிறந்தோம்? என்பதையுணர்வதில்லை ஆடவரை விட பெண்களேமிகவும்சிறந்த சன்மங்கள் எனத் தத்துவ ஞானிகள் கூறியுள்ளனர். இதையே கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் வியந்து மதித்துப் பாடியுள்ளார்.

''மங்கை யராய்ப்
பிறப்பதற்கே — நல்ல
மாதவஞ் செய்திட
வேண்டுமம்மா
பங்கயக் கைநலம்
பார்த்தலவோ—இந்தப்
பாரில் அறங்கள்
வளருமம்மா''

ஆனால் இன்று நம்மில் பெரும்பாலோர், எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போவோம் என்று எண்ணி ஆடம்பரமாக, மாயவாழ்க்கை நடத்துகின்றனர். நாமெல்லோரும் வாழ்க்கை என்னும் பாதையிற் செல்லும் வழிப்போக்கர்கள். ஆகவே நாம் இப்பாதையிற் பற்றுவைத்துத் தங்கிவிடக்கூடாது என்பதை உணராமல் நாம் எமக்குக் கிடைக்கும் பொருள்கள் யாவற்றையும் மற்றவர்களுக்கும் கொடுத்து எல்லோரும் சமமாக வாழத்தெரியாமல் திண்டாடுகிறோம்.

நம் மங்கையர்கள் அருந்ததி, கண்ணகி, நளாயினி போன்ற கற்பிற்சிறந்த பெண்மணிகளைப் பின்பற்ற வேண்டும். சாதாரணமாக, பிரமச்சாரிணிகளாயிருந்து பெரும் பணியாற்றிப் பேரின்பப் பெருவாழ்வெய்தி அழியாப் புகழ் பெற்ற மணிமேகலை, ஔவையார், திலகவதியார் போன்ற நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகளும் நம்மிடையேதோன்றத் தக்கவகையில் பெண்கள் சமுதாயம் நிதானமாக முன்னேற வேண்டும் என்பதை உணர்ந்து அதற்கேற்ற வகையில் நடந்துகொள்வோமாக.

செல்வி மனோன் செல்லத்துரை
சங்கரத்தை, வட்டுக்கோட்டை

## ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் குருபூசை

ஷெ குருபூசை 21-5-62 திங்கட்கிழமை பி. ப 6 மணிக்கு கொழும்பு இந்து வாலிபர் சங்க ஆதரவில் விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறும். கொழும்பிலுள்ள சிறந்த பஜனைக் குழுக்களான ஸ்ரீசண்முகானந்த கான சபையினரும், ஜெயந்திநகர் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிகோவில் திருஞானசம்பந்த கான சபையினரும் பக்திப்பாடல்கள் பாடுவார்கள். திரு. க செல்லத்தம்பி அவர்களுடைய உபந்நியாசமும், திருவாளர்கள்: வேலுப்பிள்ளை சிவஞானம், கோபால் குமாரசாம ஆகியோருடைய இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

குருபூசைக்கு சங்கத்தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் M P தலைமைவகிப்பார்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. [illegible] சின்னத்துரை அவர்களால் 18-5-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம, சிவப்பிரகாசம்

## தீய செயலையே வெறுப்போம்

வளர்ந்தவர் வளர்த்த தாயின் பாலைக் குடித்துச் சீவிக்கலாமா? குழந்தை தாய்ப்பாலையே கட்டாயம் குடித்து வாழவேண்டும். ஆகவே குழந்தைக்குச் சரியெனக் கொள்ளக்கூடியதொரு நீதி வளர்ந்தார்க்குப் பொருந்தாதேயாம். வளர்ந்தோர் செய்வது தவறு என உலகம் கருதும் ஒரு செயலைச் சிறு குழந்தைகள் செய்வது சரியென ஒப்புகின்றது. குழந்தையின் செயல் எமக்குப் பிழையாயினும் யாம் அக் குழந்தையை வெறுப்பதில்லை. யாம் அச்செயலைச் செய்யின், செயலை வெறும்போமன்றி எம்மை வெறுப்பதில்லை. அதனைப் போல எங்கள் நண்பர்கள் செய்யும் தவறுகளை வெறுப்பதன்றி அவர்களை யாம் என்றும் வெறுக்கக்கூடாது. அத்தவறுகளை யாம் செய்யக்கூடாது. உலகம் முழுவதும் கடவுள் மயமே; அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ?

— சுவாமி ராமதீர்த்தர்,

## அணிந்துரை அரங்கம்

''சங்கப்பலகை''
(மாதமிருமுறை ஏடு)
ஆசிரியர்: நக்கீரன்,
வெளியீடு: ச. முத்துலிங்கம்
இணுவில்
விலை சதம்: 20.

அரசியல், கலை, இலக்கியம், விமர்சனம் முதலிய பகுதிகளைக்கொண்டு வெளிவரும் சங்கப் பலகையில் காரசாரமான எழுத்துரைகள் ஒவ்வோ ரிதழிலும் இடம்பெற்று வருகின்றன.

## ஆசார்யாபிஷேகம்

மட்டுவில் பிரம்மஸ்ரீ ந. பொன்னுஸ்வாமிககுருக்கள் அவர்களின் மருமகனும், திருக்கணித பஞ்சாங்க கணிதர் பிரம்மஸ்ரீ. சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் மைத்துனருமாகிய ஸ்ரீ. சி. சிதம்பரநாத ஐயருக்கு 10-5-62 வியாழக்கிழமை சிவஸ்ரீ. எஸ் சுவாமிநாதக்குருககள் ஆகியோர் மேற்பார்வையில் த. காசிநாதக்குருக்கள் அவர்களால் ஆசார்யாபிஷேகம் சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது.

## அராபியை அகற்றிய அந்த ஒட்டகமா?



வாக்காளர்: யாழ்ப்பாண மாநகர சபையைக்கலைத்து அரசாங்க அதிகாரியிடம் ஒப்புவிக்கச் சிலர் பஞ்சாய்ப் பறக்கின்றார்களாமே?

வழிப்போக்கர்: அராபியன் குடிசைக்குள் நுழைந்த ஒட்டகம் மாதிரி மாநகர சபைக்குட் புகுந்த சிலரின் திட்டம் இது இதை வாக்காளர் மட்டம் தட்ட வேண்டும் அண்ணே...

## உ
## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் குருபூசை

நாள்: சுபகிருது ஹூ வைகாசி மீ அஉ (22 - 5 - 62) செவ்வாய்க்கிழமை.
இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

சிவபூசை மண்டபத்தில் சிவபூசை,
சபை மண்டபத்தில்
கடவுளாராதனை
புராணபடனம்—
திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணம்—இறுதியிலுள்ள 50 செய்யுள்கள், மாகேசுரபூசை.

விரிவுரைக்கூட்டம்
இரவு: 7 மணி
கடவுளாராதனை
ஸ்ரீமத், தி, கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
''திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஞானப்பாலுண்டமை''
பண்டிதர் பிரம்மஸ்ரீ,
வ மு. இரத்தினேசுவரஐயர்
''சோதியிற் கலத்தல்''
சைவப்பிரசாரகர்,
திரு. பொ. அப்புக்குட்டிஅவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக,

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காட்டுவளவில் கோவில்கொண்டருளியிருக்கும் உசன்கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தாக்கள்.
உசன் 1. கந்தையா சுவாமிநாதர்
கரம்பகம் 2. கந்தையா விநாசித்தம்பி
,, 3. சந்திரசேகரி இராசரத்தினம். – வழக்காளிகள்.
இல. 1832.
எதிராக
உடுவில் 1. பொன்னம்பலம் நாகலிங்கம்.
,, 2. பெண் நாகலட்சுமி
மல்லாகம் 3. யாழ்ப்பாணம் மத்திய பஸ்கொம்பனியின் தொழிலாளர் சேமலாபநிதிச் சங்கம்,
வதிரி 4. கே. வேலுப்பிள்ளை நடராசா – எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 1832ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1962ம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 9ம் திகதி (9-6-62) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 6757-70ம், இதில் ரூபா 4975 க்கு 6-10-59 திகதி தொடக்கம் 9-2-60 திகதி வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுப்படும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 287-85 சதம், இதில் ரூபா 1.00/— இறுபட்டது,

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோவிற்பற்று உடுவிலிலுறை ''பெரியபுலம்'' நிலப் பரப்பு 11ம் குளி 8 5/8ம் இதில் கிழக்குப் பக்கமாக சொந்தமாக நிலப்பரப்பு 5ம் குளி 12 5/16ம் இக்காணியில் இருக்கும் கல்வீட்டில் கிழக்குப்பககமாக அரைவாசியும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் வட கிழக்கே யிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும். ஆனல் குறித்த கிணற்றில் மேற்கே மிகுதிக் காணிக்குரிய அரைவாசிப் பங்கும், வழிவாய்க்காலும், எல்லை கிழக்கு கனக சபை பெண் செல்வரத்தினத்தின் ஆதனம். வடக்கு கந்தையா பெண் மாணிக்கத்தின் ஆதனம். மேற்கு மிகுதி ஆதனம். தெற்கு கை ஒழுங்கை. இதடங்கலும் முற் பதிவு H 282/57,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer,
தெல்லிப்பழை, 4-4-1962,
M, 16 18.5.62.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org